RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்-51 | 24 பிப்ரவரி | திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ''மதத்தை கேலி செய்து மக்களை பிளவுபடுத்த சில தலைவர்கள் முயல்கிறார்கள்'': பிரதமர் மோடி

சத்தர்பூர், பிப்.24

மகா கும்பமேளா குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சித்து வரும் நிலையில் "இப்போதெல்லாம் சில தலைவர்கள் குழு, மதத்தை கேலி செய்தும், மக்களை பிளவுபடுத்தவும் முயற்சி செய்கிறது" என்று பிரதமர் மோடி குற்றம்சாட்டியுள்ளார்.



மத்தியப்பிரதேச மாநிலம் சத்தர்பூரில் பாகேஷ்வர் தாமில், புற்றுநோய்க்கான மருத்துவம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பிரதமர் மோடி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அடிக்கல் நாட்டினார். பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டுபேசியபிரதமர் மோடி, ''சில தலைவர்கள் குழு, மதத்தைக் கேலி செய்தும், மக்களை பிளவுபடுத்தவும் முயற்சி செய்கிறது. பல நேரங்களில் அந்நிய சக்திகள் அவர்களுக்கு உதவி செய்து இந்தியாவையும் அதன் மதத்தையும் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றன. இந்து நம்பிக்கைகளை வெறுக்கும் மக்கள், பல நூற்றாண்டுகளாக ஏதோ ஒரு கட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

அடிமை மனநிலையில் வீழ்ந்திருக்கும் மக்கள், நமது நம்பிக்கைகள், சடங்குகள், கோயில்கள், நமது மதங்கள், கலாச்சாரம் மற்றும் கொள்கைகளை தொடர்ந்து தாக்கி வருகின்றனர். அவர்கள் நமது திருவிழாக்கள், பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்களை துஷ்பிரயோகம் செய்கின்றனர். முற்போக்கான மதம் மற்றும் கலாச்சாரத்தை தாக்குவது இயல்புதான். நமது சமூகத்தை பிரித்து அதன் ஒற்றுமையை உடைப்பதே அவர்களின் நோக்கம்.

இந்த நேரத்தில், தீரேந்திர சாஸ்திரி நீண்ட காலமாக நாட்டை ஒற்றுமையுடன் காப்பது குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு உணர்த்தி வருகிறார். இப்போது, சமூகம் மற்றும் மனிதத்தின் மீதான ஆர்வத்தில் அவர் மற்றொரு தீர்மானத்துக்கும் வந்துள்ளார். இந்த புற்றுநோய்க்கான நிறுவனத்தை கட்டுவதுதான் அது. அதாவது, இனிபாகேஷ்வர் தாமில் நீங்கள், பஜனைகளின் ஆசீர்வாதம், உணவு மற்றும் ஆரோக்கியத்தினையும் பெறலாம்.

மிகக்குறுகிய காலத்தில் மாவீரர்களின் பூமியான பண்டேல்கண்டுக்கு இரண்டாவது முறையாக செல்லும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்துள்ளது. இம்முறை எனக்கு பாலாஜி யிடமிருந்து அழைப்பு வந்தது. ஹனுமனின் ஆசீர்வாதத்தால், நம்பிக்கையின் மையம், இனிமேல் ஆரோக்கியத்தின் மையமாகவும் மாறப்போகிறது. சிறிது நேரத்துக்கு முன்புதான் ஸ்ரீபாகேஸ்வர் தாம் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு நான் அடிக்கல் நாட்டினேன்.

அந்த நிறுவனம் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட உள்ளது. முதல் கட்டத்திலேயே 100 படுக்கைகள் கொண்ட வசதிகள் தயாராக இருக்கும். இந்த குறிப்பிடத்தகுந்த பணிக்காக தீரேந்திர சாஸ்திரிகளையும் பண்டல்கண்ட் மக்களையும் நான் வாழ்த்துகிறேன்" இவ்வாறு பிரதமர் பேசினார். பிரதமர் மோடி இரண்டு நாள் பயணமாக மத்தியப்பிரதேசம் சென்றுள்ளார்.

## ''பிரிந்தவர்கள் ஒன்றிணைந்தால் மட்டுமே 2026 தேர்தலில் அதிமுக வெற்றி பெறும்'': ஓபிஎஸ் பேட்டி

தேவகோட்டை, பிப்.24

'அதிமுகவில் பிரிந்தவர்கள் ஒன்றிணைந்தால் மட்டுமே 2026 ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற முடியும்' என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ''அதிமுகவில் பிரிந்தவர்கள் ஒன்றிணைந்தால் மட்டுமே 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற முடியும். இதை தான் மக்கள் தமிழகத்தின் மூளை முடுக்கெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதிமுக, பாஜக கூட்டணி குறித்து தேர்தல் நேரத்தில் பேசி முடிவு செய்வர். திராவிட வரலாற்றில் இரு மொழிக் கொள்கை தான் உள்ளது. அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதாவைத் தொடர்ந்து நான் முதல்வராக இருந்தபோதும் இருமொழிக் கொள்கைக்கு தான் தீர்மானம் நிறைவேற்றினோம்.

அதிமுகவின் தூய தொண்டர்கள் யாரும், எந்த கட்சிக்கும் செல்ல மாட்டார்கள் என்பது வரலாறு. ஓர் அரசியல் கட்சி எந்த இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை கணித்து மக்கள் சரியான தீர்ப்பு வழங்குவர். விஜய் இதுவரை தேர்தலில் நின்று மக்கள் தீர்ப்பை பெறவில்லை. மக்களின் தீர்ப்புக்கு பின்னர் தான் அவரது கட்சி பற்றி கருத்து சொல்ல முடியும்" என கூறினார்.

## "நாதகவுக்கு இது களையுதிர் காலம்!" காளியம்மாள் விலகல் சலசலப்புக்கு சீமான் பதில்





சென்னை, பிப்.24

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, இந்தி என்ற ஒற்றை மொழியை திணித்து இந்த நாட்டை கூறு போட துடிக்கிறீர்கள் எனக் குற்றம்சாட்டுகிறேன். மொழியை வைத்து நாட்டை கூறுபோட துடிப்பது நீங்களா? நாங்களா?

எங்களுக்கு நிதி வரவில்லை என்று எத்தனை நாட்களுக்கு கூறிக் கொண்டிருப்பது? என்னுடைய மாநிலத்திலிருந்து ஒரு ரூபாய் நிதி கூட வராது என்று சொல்ல முடியாதா? மாநிலங்களின் நிதிதான் மத்திய அரசின் நிதி. ஒன்றிய அரசுக்கு நிதி ஏது? இதைச் செய்தால்தான் நிதி ஒதுக்குவோம் என சொல்வது கொடிய போக்கு. இது எப்படிப்பட்ட அணுகுமுறை?!" என்றார்.

காளியம்மாளின் கட்சி விலகல் குறித்த கேள்விக்கு பதிலளித்தவர், "நாம் தமிழர் கட்சியில் முழு சுதந்திரம் இருக்கிறது. விரும்பி இயங்குவதற்கும், விருப்பம் இல்லையெனில் வெளியேறுவதற்கும் முழு சுதந்திரம் இருக்கிறது. தங்கையை (காளியம்மாள்) நான்தான் அழைத்து வந்தேன். அவருக்கு எல்லா சுதந்திரமும் இருக்கிறது. பக்கத்தில் நிற்பவர் கூட நாளைக்கு வேறு ஓர் அமைப்புக்கு போகலாம். வரும்போது 'வாங்க வாங்க, வணக்கம்' என்போம். போகும்போது 'போங்க, ரொம்ப நன்றி. வாழ்த்துகள்' என்று சொல்வோம். இது எங்களுடைய கொள்கை.

பருவ காலத்தில் இலையுதிர் காலம் என்று இருக்கிறது. எங்கள் கட்சிக்கு இது களையுதிர் காலம். காளியம்மாளுக்கு முழு சுதந்திரம் இருக்கிறது. கட்சியிலேயே இருப்பதா அல்லது கட்சியை விட்டு வேறு இடத்தில் சென்று இயங்குவதா என்று முடிவு எடுக்கும் உரிமை அவருக்கு இருக்கிறது" என்று சீமான் தெரிவித்துள்ளார்.

## ''மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண கூட்டு பணிக்குழுவை உடனே கூட்டுக'' மத்திய அரசுக்கு முதல்வர் கடிதம்

சென்னை, பிப்.24






ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து 5 மீன்பிடி படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 32 மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், "தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை சமீப காலங்களில் கவலை அளிக்கக் கூடிய வகையில் அதிகரித்துள்ளது. நேற்று ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 32 மீனவர்களையும் அவர்களது 5 மீன்பிடி விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று நான் பலமுறை கேட்டுக் கொண்ட போதிலும், இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் இன்னும் அதிக அளவில் தொடர்கிறது. இந்த ஆண்டில் மட்டும், எட்டு வெவ்வேறு சம்பவங்களில் 119 மீனவர்களும், 16 படகுகளும் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கூட்டு பணிக்குழுவை உடனடியாகக் கூட்ட வேண்டும். நமது மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், இக்கூட்டத்தைக் கூட்டி நிரந்தர தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எனவே நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கவும், கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து விரைவில் விடுவிக்கவும் வலுவான தூதரக முயற்சிகளை எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## 'ஊழல் கூடாரத்தில் டப்பிங் பணி...' மநீம தலைவர் கமல்ஹாசன் மீது தவெக விமர்சனம்

சென்னை, பிப்.24

"தொலைக்காட்சிப் பெட்டியை உடைத்து வீரவசனம் பேசியவர், ஊழல் கூடாரத்தில் இளைப்பாறிக் கொண்டு டப்பிங் பணி செய்கிறார்," என மநீம தலைவர் கமல்ஹாசனை தவெக மறைமுகமாகவும் கடுமையாகவும் விமர்சனம் செய்துள்ளது.





இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழக மாநில இணைச் செய்தித் தொடர்பாளர் எஸ்.ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இவ்வளவு நாளாக ஒருவர் பேசியது தான் மக்களுக்கு புரியவில்லை என்றால், இப்போது அவர் யார், எதற்காக வந்தார் என்பது அவருக்கே புரியாமல் பேசி வருகிறார். அவர் யாரென்று நேரடியாக சொல்ல வேண்டிய அவசியமில்லை. சொல்லாமலே மக்களுக்கு புரியும்.

ரசிகர்களும், மக்களும் வாக்காளர்களாக மாறுவது அந்த நடிகரின் மக்கள் செல்வாக்கு, தலைசிறந்த கொள்கைகள், தமிழகம் சார்ந்த அரசியல் முன்னெடுப்பு, மக்கள் நலன் சார்ந்த பணிகள் ஆகியவற்றை சார்ந்தது. ரசிகர்கள் வேறு வாக்காளர்கள் வேறு என்று திடீரென போதி மரம் அடியில் அமர்ந்து ஞானம் பெற்றதுபோல் அறிவாலயத்தில் கலந்து கரைந்த பின் பேசி வருகிறார்கள். எம்ஜிஆர் ரசிகர்கள் வேறு, சிவாஜி ரசிகர்கள் வேறு, ரஜினி ரசிகர்கள் வேறு, மற்ற ரசிகர்கள் வேறு, எங்கள் தலைவர் விஜய் ரசிகர்கள் வேறு.

எம்ஜிஆரின் அரசியல் வெற்றியை சிவாஜி பெற முடியவில்லை. எம்ஜிஆர் தனது ரசிகர்களை அரசியல் மயப்படுத்தி வாக்காளர்களாக்கியது போல எங்கள் தலைவர் கோடிக்கணக்கான ரசிகர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழக மக்களையும் எப்படி வாக்காளர்களாக மாற்றுகிறார் என்பதை பாருங்கள். ஒருவரது செயல்பாடுகள் தான் வெற்றியையும் தோல்வியையும் நிர்ணயம் செய்யும். எந்த ஊழல் கூடாரத்துக்கு எதிராக தொலைக்காட்சி பெட்டியை எல்லாம் உடைத்து வீர வசனம் பேசி வந்தார்களோ, இன்று அதே ஊழல் கூடாரத்தில் சுயநலனுக்காக இளைப்பாறிக் கொண்டு அவர்களுக்காக டப்பிங் பணிகள் செய்து வருகிறார்கள்.

மக்களுக்காக மக்களை நம்பி உழைத்தால் என்றுமே மக்கள் ஆதரிப்பார்கள். பணி ஓய்வு காலத்தில் அரசியலுக்கு வந்துவிட்டு 'பிக்பாஸ்' பணிகளை செய்து வந்தால் இந்த நிலைமை தான் ஏற்படும் என்பதை உணர வேண்டும். இனியாவது ஆளும் 'பிக்பாஸ்'களுக்காக உழைக்காமல் மக்களுக்கு உண்மையாக உழையுங்கள். பொது நலத்துடன் உழையுங்கள்," என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## ராக்கெட் ஏவுதளத்துக்கு நிலம் எடுக்க எதிர்ப்பு உடன்குடியில் கிராம மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்

தூத்துக்குடி, பிப்.24

குலசேகரன்பட்டினத்தில் அமையவுள்ள ராக்கெட் ஏவுதளம், விண்வெளித் தொழில் நிறுவனத்துக்கு உடன்குடி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நிலம் எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து உடன்குடியில் கிராம மக்கள், வியாபாரிகள் மற்றும் அரசியல் கட்சியினர் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.



தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினம் அருகே கூடல் நகர், அமராபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியில் சிறிய ரக ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு சுமார் 2,233 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. இதில் நிலம், வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகள், நிலம் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழக அரசின் தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகக் துறை சார்பில் விண்வெளித் தொழில் நிறுவனம் அமைப்பதற்கு ஆதியாக்குறிச்சி ஊராட்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் தங்கள் வாழ்வாதாரம், நிலம் பாதிக்கப்படும் எனக் கூறிய ஆதியாக்குறிச்சி கிராம விவசாயிகள் கடந்த 4ம் தேதி உடன்குடியில் தடையை மீறி உண்ணாவிரதப் போராட்டம் நடத்த திரண்டனர். இதில் பங்கேற்ற 203 விவசாயிகளை போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து, அடுத்தக்கட்ட போராட்டங்கள் குறித்து கடந்த சில நாட்களுக்கு முன்பு உடன்குடியில் ஆலோசனை கூட்டம் நடந்தது.

அந்தக் கூட்டத்தில், நிலம் எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல கட்ட போராட்டங்களை அமைதி வழியில் நடத்த வேண்டும். வீடுகள் தோறும் கருப்புக் கொடி கட்டுவது, திண்ணைப் பிரச்சாரம் செய்வது, நிலம் எடுப்பால் பாதிக்கப்படாத மக்களையும் போராட்டத்தில் ஈடுபட வைப்பது என முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில், இன்று ஆதியாக்குறிச்சியில் விண்வெளி பூங்காவுக்கு நிலம் கையகப்படுத்த எதிர்ப்பு தெரிவித்து உடன்குடி பஜாரில் வியாபாரிகள், கிராம மக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. போராட்டத்தில், பச்சை தமிழகம் கட்சி தலைவர் சுப.உதயகுமார், இந்துமுன்னணிமாநிலதுணைத் தலைவர் வி.பி.ஜெயக்குமார், தூத்துக்குடி தெற்கு மாவட்ட வணிகர் சங்க பேரவை தலைவர் ரவி, திமுக பேரூராட்சி மன்ற உறுப்பினர் சரஸ்வதி பங்காளன், அதிமுக ஒன்றிய செயலாளர் தாமோதரன், ஊராட்சி ஒன்றியக்குழு முன்னாள் உறுப்பினர் முருங்கை மகாராஜன் மற்றும் கிராம மக்கள், அனைத்து கட்சியினர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், தும்மனட்டி ஊராட்சியில் ரூ20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு துறை சார்ந்த அரசு அதிகாரிகள் திமுக மாவட்ட செயலாளர் கே.எம். ராஜீ மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# தாம்பரத்தில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்



தாம்பரம் பிப்24

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் மேற்கு தாம்பரம் கல்யாண் நகர் மாநகராட்சி அரசு உயர்நிலை பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமை தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா துவக்கி வைத்தார்

உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் டி.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி துணை ஆணையர் எஸ்.சசிகலா, மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, பெரியநாயகம், வட்ட கழக செயலாளர் சஞ்சீவ், தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் சர்தார், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..

# தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலம் சார்பில் மக்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்




தாம்பரம் பிப்24

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டலம் சார்பில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில் காஞ்சிவடக்கு மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாற்று திறனாளிகளுக்கு நான்கு சக்கர வாகனம், பயனாளிகளுக்கு சத்துணவு, மருந்துபெட்டகங்களை வழங்கி மற்றும் பொது மக்களிடம் இருந்து குறைகள் மற்றும் கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டார் அதனை தொடர்ந்து அரசு ஆலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார் இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகர துணை மேயர் கோ. காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையர், சீ.பாலசந்தர், மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், பகுதி செயலாளர் ஆ.நடராஜன், தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பொது மக்கள் பங்கேற்றனர்.

# ஆனந்தூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியின் நூற்றாண்டு விழா



ஆனந்தூர்.பிப்24

இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் தாலுகா ஆனந்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளியின் நூற்றாண்டு விழா தலைமை ஆசிரியர் வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஆர்.எஸ். மங்கலம் காவல்நிலைய ஆய்வாளர் (பொறுப்பு) துணை காவல் கண்காணிப்பாளர் தனுஷ் குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். இதனை தொடர்ந்து இப்பள்ளியில் பயின்று பல்வேறு துறைகளில் பணியாற்றிவரும் பள்ளியில் பயின்ற முன்னாள்

# மஹா சிவராத்திரி 2025: உலகின் அறிவு எழுச்சிக்கான நூற்றாண்டு நிகழ்வு

மதுரை: பிப் 24

நமது பண்டைய ஆன்மீக கலாச்சாரமும் அபூர்வமான வானியல் அற்புதங்களும் சங்கமிக்கும் மகாமக சிவராத்திரி 2025 பிப்ரவரி 26 ஆம் தேதி நிகழ்கிறது. லட்சக்கணக்கான ஆன்மீக அன்பர்கள் மகிழ்ச்சியோடு கூடும் திருநாள் இது பிரக்யா ராஜன் மகா கும்பமேளா கொண்டாடப்படும் தருணத்தில் இது நிகழ்வது முக்கியத்துவம் பெறுகிறது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் நாள் தான் மகா கும்பமேளா வியாழன் சூரியன் சந்திரன், சனி ஆகிய கோள்கள் ஒன்று சேரும் இந்நாள் ஆன்மீக உணர்வு விரிவடைவதற்கு கதவு திறக்கும் நன்னாளாகும் இது 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே நடக்கும் அபூர்வ வானியல் நிகழ்வு ஆகும்.




உலகளாவிய இந்த ஆன்மீக நிகழ்வை வழி நடத்திச் செல்லும் நந்தி ஜி மகா மகா சிவராத்திரி சித்தர் நாளை தொடங்கி வைக்கிறார். உள்ளுணர்வை எழுச்சியடையச் செய்யவும் தலைமைப்பண்பை வெளிக்கொணரவும் மேம்பட்ட விழிப்புணர்வை அடையச்செய்யவும் இணைய வழியிலான யாத்திரைதான் இந்நிகழ்வு.

144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் பேரண்ட அதிசய நிகழ்வுகள் மஹா கும்ப மேளாவால் தூண்டப்பெறும். 60 கோடி வழிபாடுகள் அங்கு சங்கமிக்கும். 12 ஆண்டுகள் சுற்றுப்பாதையில் பயணிக்கும் வியாழன், அறிவுநிலையின் நாயகனாக, குரு பகவானாகத் திகழ்கிறார். எவரெல்லாம் உள்ளொளியை ஏற்றுகிறாரோ, அவருக்கு நிச்சயம் பேரருளின் மகத்துவம் மஹா மஹா சிவராத்திரியால் கிடைக்கும். மஹா கும்ப மேளாவில் புனித நதிகளில் நீராடுவதன்மூலமாக நம்மை சுத்தப்படுத்திக்கொள்கிறோம். புதுப்பித்துக்கொள்கிறோம்; குணப்படுத்திக் கொள்கிறோம். சிவபெருமானுடன் நாம் நம்மைப்பிணைத்துக்கொள்ளத் தயாராகிறோம். 'சைவம் வெற்றி' என்று ஒரு தமிழ் வாக்கியம் உண்டு. அதற்கு 'சிறந்ததே வெல்லும்' என்று பொருள்" என்றார் உலக சித்தர் நாளை சிவராத்திரியன்று தொடக்கிவைக்கும் நந்திஜி. உலகம் மேம்பட உள்ளார்ந்த ஞானத்தைத் தரும் சமூகத் தளமான சி.என்.இ.எஸ். எஸ் அமைப்பின் நிறுவனர் அவராவார்.

சர்வதேச யோகா தினத்தை ஐ.நா சபை, 2014ல் ஏற்றுக்கொண்டது. அதற்கான காரணியாக நமது பிரதமர் நரேந்திர மோடி இருந்ததுடன், அதனால் ஈர்க்கப்படவும் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதே வழியில், சர்வதேச யோகா தினத்தின் குறிக்கோளான, 'தெளிந்த ஞானத்தின் வாயிலாக சிவபெருமானை அடையும் ஆற்றலைப் பெறுவதையே' மஹா சிவராத்திரி உலக சித்தர் நாளும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

உலகளாவிய அளவில் நடக்கும் இந்த இணைய வழி நிகழ்ச்சியில் யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். 2025, பிப்ரவரி 26, 28 ஆகிய நாட்களில் இது நடைபெறும். வரலாற்றுப் புகழ்மிக்க இந்த அனுபவத்தைப் பெற www. worldyogiday.org என்ற தளத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.



கன்னியாகுமரி மாவட்டம் முத்து நியுரோ சென்டர். சுங்கான் கடை,புனித அந்தோனியார் அருட் பணி பேரவை குருசடி, மேரிஸ் அறக்கட்டளை குருசடி இணைந்து நடத்திய மாபெரும் இலவச மருத்துவ முகாம் குருசடி புனித அந்தோணியார் ஆலயவளாகத்தில் ஆலய பங்குத்தந்தை அருட்பணி பெர்பெச்சுவல் ஆன்றனி குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்து வைக்க நாகர்கோவில் மாநகராட்சி துணைமேயர் ம.மேரி பிரின்சி லதா முன்னிலையில் அருட்பணி பேரவை செயலாளர் ரமணி ஜெலிஸ்கலந்து கொள்ள சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மேரீஸ் அறக்கட்டளை நிர்வாகிகள் தே.அமலராஜா. கலிஸ்டஸ்,மேரி ஷோபா,மருத்துவக் குழு மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்..

# கோடநாடு எஸ்டேட் கொலை, கொள்ளை வழக்கு உதகை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை

கோடநாடு, பிப்.24

கொடநாடு கொலை கொள்ளை வழக்கில் இன்டர் போல் விசாரணை இதுவரை கிடைக்காததால் சேலம் நீதிமன்ற நடுவர் மூலம் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என அரசு தரப்பு வழக்கறிஞர் ஷாஜகான் தெரிவித்துள்ளளர்.

மேலும் இதுவரை கோடநாடு கொலை கொள்ளை வழக்கு சம்பந்தமாக இதுவரை 245 பேரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோடநாடு எஸ்டேட் கொலை, கொள்ளை வழக்கு உதகையில் உள்ள மாவட்ட



அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி முரளிதரன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கேரளா மாநிலத்தை சேர்ந்த சயான் மற்றும் வாளையாறு மனோஜ் ஆகியோர் ஆஜராகினார். இதில் அரசு தரப்பு வழக்கறிஞர் ஷாஜகான் மற்றும் கனகராஜ் ஆகியோர் நேரில் ஆஜராகினர். அதேபோல் வழக்கை விசாரித்து வரும் சிபிசிஐடி ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையில் சிபிசிஐடி போலீசார் ஆஜராகினர்.

அரசு தரப்பில் கூடுதல் அவகாசம் கேட்டதை தொடர்ந்து வழக்கை விசாரித்த நீதிபதி மார்ச் மாதம் 19ம் தேதிக்கு வழக்கின் விசாரணையை ஒத்திவைத்து உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அரசு தரப்பு வழக்கறிஞர் ஷாஜகான் இடம் வெளிநாட்டிலிருந்து வந்த அழைப்பு குறித்து இன்டர் போல் விசாரணை குறித்து கேள்வி கேட்டபோது, இன்டர்போல் விசாரணை அறிக்கை இதுவரை இது சம்பந்தமாக சேலம் நீதித்துறை நடுவர் மூலமாக நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதுவரை கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் 245 பேரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பல்லாவரத்தில் தேமுதிக 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு பொதுகூட்டம்

பல்லாவரம் பிப் 24

பல்லாவரத்தில் தேமுதிக 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா முன்னிட்டு நடைபெற்ற பொதுகூட்டத்தில் தேமுதிக கழக கொடி அறிமுகபடுத்தபட்டு முதல் முதலாக அனகாபுத்தூர் பகுதியில் கொடி ஏற்றபட்டது என அனகை முருகேசன தெரிவித்தார்.

சென்னை அடுத்த பல்லாவரம் அம்பேத்கர் சிலை அருகே தேமுதிக கட்சி தொடங்கபட்டு 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா முன்னிட்டு பல்லாவரம் தொகுதியின் பகுதி செயலாளர் செந்தில்குமார் மற்றும் விஜயகுமார், கணேசன் தலைமையில் நடைபெற்றது. பொதுகூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கழக அவைத் தலைவர் இளங்கோவன், செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் அனகை முருகேசன், தலைமை கழக பேச்சாளர் தம்பி முருகன், முகிலரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அனகை முருகேசன் பேசுகையில் தேமுதிக கொடி அறிமுகபடுத்தபட்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் அனகாபுத்தூர் பகுதியில் முதல் முதலாக ஏற்றபட்டது என தெரிவித்தார். இதனை தொடர்ந்து ஏழை,



எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளான தையல் மிஷின், சேலைகள் வழங்கப்பட்டது இதில் மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் பார்த்திமா ஸ்டெல்லா, பெருங்களத்தூர் பகுதி செயலாளர் அருள், தெற்கு பகுதி செயலாளர் கே.டி.எம் தர்மா, லோகநாதன், தமிழரசி, டி.ஏழுமலை, சுஜாதா நந்தினி, பாலமுருகன், கலா, ஆறுமுகம், ஏழுமலை, காந்தி ராஜ், மகேந்திரன், கன்னியப்பன், சந்தோஷ் குமார், சதீஷ்குமார், பல்லாவரம் வடக்கு, தெற்கு பகுதி கழக மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் உட்பட ஏராமனோர் கலந்து கொண்டனர்.



மதுரை விளாங்குடி கலைஞர் திருடலில் மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது இதில் பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்திக்கு சோலை அழகுபுரம் பகுதி கழகப் பொருளாளர் பல்சர் ஜி பி மணிகண்டன் 80 வட்டக் கழகப் பிரதிநிதி ஏ பி மணிகண்டன் ஆகியோர் வீரவாள் பரிசளித்தனர்




கன்னியாகுமரி மாவட்டம்பெட்ரோல் நிலையங்களில் வாகனங்களுக்கு இஞ்சின் ஆயில் மற்றும் திட்டத்தை கைவிட வேண்டும்,மத்திய அரசு வழங்கும் காப்பீட்டுக்கு ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுவதை திரும்ப பெற வேண்டும், இருசக்கர தொழிலாளர்களுக்கு என தனி நல வாரியம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி குமரி மாவட்ட நேதாஜி இருசக்கர வாகன பழுது நீக்குவோர் நலச்சங்கம் மற்றும் தமிழ்நாடு இருசக்கர வாகன பழுது நீக்குவோர் தலைமை நலச் சங்கம் இணைந்து கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைப்பெற்ற மாவட்ட பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்மேலும் இருசக்கர வாகனங்களின் உதிரிபாகக் கண்காட்சி நடைபெற்றதுஇந்த கண்காட்சியில் பல்வேறு வகையான இருசக்கர வாகனங்களுக்கு தற்போதுள்ள நவீன தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## கீழக்கரை கண்ணாடி வாப்பா சர்வதேசப் பள்ளியின் 11ம் ஆண்டுவிழா தினக்கொண்டாட்டம்






கீழக்கரை, பிப்.24

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் கண்ணாடி வாப்பா சர்வதேசப்பள்ளியின் 11ஆவது ஆண்டுவிழா கொண்டாட்டம் 22.02.25 அன்று சிறப்பாக நடைபெற்றது. பள்ளியின் தாளாளர் மரியம் சையத் சலாவுதீன் வாழ்த்துகள் தெரிவிக்க, சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகை சுஜிதா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் .

பள்ளி அறங்காவலர்கள் முனைவர். சதக்கத்துல்லா ,பேராசிரியர் , முனைவர். முகமது அப்துல்காதர் இருவரும் வாழ்த்துரை வழங்கினார்கள் .வண்ண ஆடைகளுடன் கண்ணைக்கவரும் மழலைகளின் அழகு நடனம், பாடல்,குறுநாடகம் போன்ற பலவித கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பள்ளி முதல்வர் பிரமோதா மேனன் , நிர்வாக அலுவலர் முகமது அன்சர் மற்றும் ஆசிரியர்கள் விழாவினை சிறப்பாக வழிநடத்தினர் .

## பாபா மெட்ரிக் பள்ளி பாபா கார்டன் பள்ளி ஆண்டுவிழா



மானாமதுரை பிப்24

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் 46 வது பரிசளிப்பு விழா மற்றும் ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக நமது பள்ளியின் நிறுவனர் அம்மா இராஜேஸ்வரி, அகஸ்டின் மார்டின்(காவல் துணை ஆய்வாளர்)மானாமதுரை காவல்நிலையம்,

கனரா வங்கிமேலாளர் ரம்யா கலந்துகொண்டனர்.இவ்வினிய விழாவில் மாணவர்களின் சிலம்பம்,யோகா, கராத்தே போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது அதைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கராத்தே,யோகா,சிலம்பம் போன்றவற்றிக்கும் மற்றும் சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டது.

46வது ஆண்டு விழாவில் தலைமை விருந்தினராக முருகேசன் தொழிலதிபர் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கிருஷ்ணகுமார்வட்டாட்சியர் ) மானாமதுரை ரவேந்திரன் (காவல் ஆய்வாளர்) மானாமதுரை காவல்நிலையம், .புவனேஸ்வரன் (தலைமையாசிரியர்)மேல்நிலைப்பள்ளி இடைக்காட்டூர்)) மற்றும் சிவபுராண செம்மல் முருகேசன் தமிழாசிரியர்(பேச்சாளர்) அரசு உயர் நிலைப்பள்ளி

கருப்புகுடிபட்டி, புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் இந்த கல்வியாண்டு முழுவதிலும் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கும், வருகையில் முதல் இடங்களை பிடித்த மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் கடந்தாண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.மேலும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறியது. சிறப்பு விருந்தினர்களுக்கு பள்ளியின் தாளாளர் கபிலன் பொன்னாடை அணிவித்து கௌரவப் படுத்தினார். பள்ளியின் நிர்வாகி மீனாட்சி நினைவு பரிசினை வழங்கினார்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் முதல்வர் .சாரதா மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

## திருவாடானை அருகே மின் கம்பி அறுந்து விழுந்து பெண் ஒருவர் பலியான சோகம்

திருவாடானை அருகே அடிக்கடி அறுந்து விழும் மின்கம்பி அதிகாரிகளின் அலட்சியத்தால் மின் கம்பி அறுந்து விழுந்து பெண் ஒருவர் பலியான சோகம்.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா கட்டிவயல் ஊராட்சி ஆக்களூர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மனைவி ஜான்சி ராணி



(வயது37) என்பவர் நேற்று அதிகாலை வீட்டின் அருகே மின் கம்பத்தில் உள்ள மின் கம்பி அறுந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். இந்த மின்கம்பி அடிக்கடி அறுந்து சரி செய்ததாகவும். அதிகாரிகள் இதற்கு நிரந்தரமான தீர்வு செய்யப்படாததால் இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது என மக்கள் சோகத்தில் ஆழ்ந்து உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கல்லூரி சாலை பஸ்டாபில் படத்தில் மேலும் காணும் நபர் படுத்திருந்த நிலையில் நேற்று பிப்23:ம் தேதி மாலை 05:00 மணியளவில் இறந்து விட்டார். இவரைப் பற்றி விபரம் எதுவும் தெரியாததால் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். நபர் பற்றி விபரம் தெரிந்தவர்கள் கீழ்க்கண்ட அழகப்பா புரம் காவல் நிலையம் 9498101677 எண்ணில் தொடர்பு கொள்ளலாம் காவல்துறையினர் அறி வித்துள்ளனர்..

## தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு 7777 பேருக்கு நலத்திட்ட உதவிகள் - பிரமாண்ட பொதுக்கூட்டம்

பெரியகுளம் பிப்.24

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 77 பிறந்தநாளை கொண்டாடுவது குறித்து ஆலேசனைக் கூட்டம் அஇஅதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு சார்பில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சையதுகான் தலைமை தாங்கினார். முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் சிறப்புரையாற்றினார். மேலும் இந்த ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை அதிக விளம்பர பதாகைகள் அமைத்து, ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் அன்னதானம் மற்றும்



இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் செய்ய வேண்டும் என்றும் விரைவில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தி 7777 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என்று பேசினர். இந்நிகழ்விற்கு முன்னாள் எம்.பிரவீந்திரநாத், அமைப்பு செயலாளர்கள் மஞ்சுளா, ராதா, மாவட்ட கழக துனைச் செயலாளர் முருகேசன் ஒன்றிய செயலாளர் செல்லமுத்து பெரியகுளம் நகர செயலாளர் அப்துல் சமது, மற்றும் மவட்ட கழக. ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர் கழக சார்பு அணி நிருவகிகள் உட்பட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கம்பத்தைச் சேர்ந்த வர்களுக்கு கஞ்சா விற்றதாகஆந்திர வியாபாரி கைது

கம்பம் , 24

தேனி மாவட்டம், கம்பத்தைச் சேர்ந்த வர்களுக்கு கஞ்சா விற்றதாக ஆந் திர மாநிலத்தைச் சேர்ந்தவரை தனிப்படை போலீஸார் கைது செய்து, சனிக்கிழமை சிறையில் அடைத்தனர்.

கம்பம் வடக்கு காவல் நிலைய போலீஸார் கடந்த ஆண்டு, டிசம் பர் 4 ஆம் தேதி 4 கிலோ கஞ்சா பிடிபட்ட வழக்கில், 3 பேரைக் கைதுசெய்தனர். இவர்களில் இரு வரை குண்டர் தடுப்புச் சட்டத் தின் கீழ் சிறையில் அடைத்தனர்

இந்த நிலையில், 4 ஆவது குற்றவாளியான ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவரைப் பிடிக்க தேனி மாவட்ட காவல் கண்கா ணிப் பாளர் சிவபிரசாத் உத்தர வின் பேரில், உத்தமபாளையம் காவல் துணைக் கண்காணிப்பா ளர் செங்கோட்டு வேலவன் மேற் பார்வையில் ஆய்வாளர் பார்த்திபன் தலைமையில் தனிப் படை அமைக்கப்பட்டது. இவர்கள் ஆந்திர மாநிலம், கோதாவரி மாவட்டம், ராஜமுந் திரி அருகேயுள்ள கோவூரைச் சேர்ந்த நாகமணி (எ) பைப்பு ரெட்டி ராஜூவை (51) அங்குள்ள போலீஸார் உதவியுடன் பிடித் தனர். மேலும், அவர் வீட்டிலிருந்த 25 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்து, அவரை கம்பம் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்தனர்

பிறகு, உத்தமபாளையம் குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றத்தில் சனிக்கிழமை முன்னிலைப்படுத்தி சிறையில் அடைத்தனர். இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் கூறியதாவது,

ஆந்திர மாநிலத்திலிருந்து கம் பம், போடி, கூடலூர் ஆகிய பகு திகளுக்கு அதிகளவில் கஞ்சா கடத்தப்படுகிறது. தற்போது கம் பம் தனிப் படை போலீஸார் கஞ்சா விநியோகம் செய்ததாக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த நாக மணியை கடந்த 10 நாள்களாக அந்த மாநிலத்திலேயே தங்கியி ருந்து கைது செய்தனர்

இதேபோல, கடந்த ஆண்டு, செப். 30 ஆம் தேதி 10.5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் இருவர் கைது செய்யப் பட்டனர்

இவர்களுக்கு கஞ்சா விநியோகம் செய்ததாக ஆந்திர மாநிலம்,



பைல்குடியைச் சேர்ந்த குல்லி பாபு மகன் செல்லி பாபு (எ) நாகேஸ்வரராவ் (35) என்பவரை யும், கடந்த ஆண்டு, அக்டோபர் 28ஆம் தேதி கஞ்சா எண்ணெய் கடத்திய வழக்கில் 5 பேரையும் போலீஸார் கைது செய்தனர்

# லோயர்கேம்ப்பில் மாணவர்கள் சார்பில் வன பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்






கம்பம், பிப் .24

தேனி மாவட்டம் லோயர்கேம்ப்பில் தமிழ்நாடு வனத்துறை, அகில இந்திய வன மேம்பாட்டு இயக்கம் மற்றும் ராயப்பன்பட்டி புனித அலோசியஸ் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் நெகிழிப்பை அகற்றுதல் வன பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது

முகாமிற்கு வன நல்வாழ்வு சங்கம் சார்பில் ஜே. ஏ. சதீஷ்குமார் தலைமை வகித்தார். மாவட்ட தொடர்பு அலுவலர் நேருராஜன், வனச்சரகர் ஸ்டாலின் முன்னிலை வகித்தனர். வானவர் ரகுபதி முகாமை தொடங்கி வைத்தார். முகாமில் வனவர்கள் சக்தி வடிவில் வினோத் கமார் தர்ம சக்தி விழிப்புணர்வு பற்றி பேசினர். உடற்கல்வி ஆசிரியர்கள் ராஜ்குமார் செல்வராஜ் மாணவர்களுக்கு கருத்துக்களை வழங்கினர். முகாம ஏற்பாடுகளை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் எஸ் குமார் சுரேஷ் ஜஸ்டின் ஆகியோர் செய்தனர். மாணவர்கள் குமுளி லோயர் கேம்ப் வனப்பகுதியில் உள்ள நெகிழி பொருட்களை அகற்றினர்.

# பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவ கல்லூரியில் இருபெரும் விழா

நெல்லை பிப் 24

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவ கல்லூரியில் இருபெரும் விழா உலக தாய்மொழி தின விழா மற்றும் பாரதியார் மொழி ஆய்வகம் திறப்பு விழா கல்லூரி பேராசிரியர் டாக்டர் மலர்விழி தலைமையில் நடைபெற்றது.

வந்திருந்த விருந்தினர்களை பேராசிரியர் கோமளவள்ளி துணை முதல்வர் வரவேற்றார்கள் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் முனைவர் சாக்ரட்டீஸ் கலந்துகொண்டு பாரதியார் மொழி ஆய்வகத்தை திறந்து வைத்து விழா பெறுரை நிகழ்த்தினார் சிறப்பு தமிழ் விருந்தாக மூத்த தமிழறிஞர் பேராசிரியர் பா வளனரசு உலகின் மூத்த மொழி தமிழ் என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார் இந்நிகழ்ச்சியில் கல்லூரி உறைவிட மருத்துவ அலுவலர்



டாக்டர் முத்துக்குமார் கல்லூரி மூத்த பேராசிரியர் டாக்டர் வேங்கடப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் சுந்தர்ராஜன் சுஜாதா மருத்துவர்கள் சித்ரா உமா கல்யாணி அனுராதா இந்திரா ராஜகுமாரி நர்மதா மற்றும் பலர் கலந்து கொண்டனர் விழாவில் பொது மருத்துவத்துறை இணை பேராசிரியர் டாக்டர் ஜி சுபாஷ் சந்திரன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் பட்டப் படிப்பு பட்டப் மேற்படிப்பு மாணவர்கள் பயிற்சி மருத்துவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் முத்தாய்ப்பாக மூத்த தமிழறிஞர் பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்களின் 250 நூல்கள் கல்லூரி நூலகத்திற்கு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் தொ.பரமசிவன் குடும்பத்தினர் திருமதி விஜயலட்சுமி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார் பாரதியார் மொழி ஆய்வகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில வழி ஆய்வகங்கள் இன்று முதல் இக்கல்லூரியில் செயல்பட தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக பேராசிரியர் வேங்கடப்பன் நன்றி கூறினார்கள்

# கம்பம் நகராட்சி பெண்கள்பள்ளியில் புதிய கட்டிடம் காணொலி காட்சியில் திறந்து வைத்த முதல்வர்



கம்பம். பிப். 24

தேனி மாவட்டம் கம்பம் முஹைதீன் ஆண்டவர் புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், நபார்டு வங்கி நிதியுதவி மூலம் (202324 திட்டத்தின் கீழ்) ரூபாய் 128 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளி கட்டிடங்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்து சிறப்பித்தார். இதைத் தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் நடைபெற்ற குத்து விளக்கு ஏற்றும்நிகழ்ச்சியில் கம்பம் நகர்மன்றத்தலைவர் வனிதா நெப்போலியன், நகராட்சி ஆணையாளர் உமாசங்கர், நகராட்சி உதவி பொறியாளர் சந்தோஷ் குமார், நகர் மன்ற உறுப்பினர்கள் சாதிக் அலி, சர்புதீன், சுந்தரி வீரபாண்டியன், சாபிரா பேகம், அமுதா, சகிதா பானு, அன்பு குமாரி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் ஆரோக்கியம்மாள், ஆசிரியைகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள், பெற்றோர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.



மதுரை மாவட்டம் ஆலத்தூர், பி.ஆர்.மகாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் சார்பாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் ‘சமுதாய வளைகாப்பு விழா’ நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ. சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாநகராட்சி மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் . ஷீலா சுந்தரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வாடிப்பட்டி அலைபேசி பயன்பாட்டால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு

வாடிப்பட்டி, பிப்.24

மதுரை மாவட்டம் , கிரட் குடும்ப ஆலோசனை மையத்துடன் சமூகப் பணிகள பயிற்சி மாணவர்கள் இணைந்து அலைப்பேசியின் பயன்பாட்டால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. இந்த கருத்தரங்கிற்கு, கிரட் செயலாளர் வழக்கறிஞர் அழகேசன் தலைமை தாங்கினார்.

குடும்ப ஆலோசனை மைய ஆலோசகர் முனைவர் கன்மணி முன்னிலை வகித்தார்.

மதுரை சமூக அறிவியல் கல்லூரி மாணவி ஸ்வேதா வசித் வரவேற்றார். இந்த கருத்தரங்கில், மதுரை ஒருங்கிணைந்த சேவை மையம் அலுவலக நிர்வாகி டயானா பெண்களின் பாதுகாப்பு அவசர உதவி எண்கள் 181 , பெண்கள் உதவி எண்,1098



குழந்தைகள் உதவி எண் ஆகியவற்றை பயன்படுத்தும் முறைபற்றி விளக்கிப்பேசினார். சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர்கள் சுதாசெல்வி, மாரீஸ்வரி , வாடிப்பட்டி காவல் நிலைய தலைமை எழுத்தர் நாகராஜன் ஆகியோர் அலைபேசி மற்றும் பெண்கள் பாதுகாப்பு குறித்தசட்டங்கள் பற்றியும், குடும்ப ஆலோசனை மையத்தின் ஆலோசகர் காசி விஸ்வநாதன் ஆகியோர் இன்றைய காலத்தில் அலைப்பேசியின் அளவில்லா பயன்பாடு மற்றும் அதன் விளைவாக பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், மனநல பாதிப்புகள், குடும்ப உறவுகளின் மாறுபட்ட நிலைமைகள் குறித்தும், மேலும், நடத்தை ஆலோசனையின் முக்கியத்துவம் மற்றும் இதை சமாளிக்க தேவையான வழிமுறைகள் பற்றியும் விளக்கி பேசினர். இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்கள்கலந்து கொண்டனர். முடிவில், அமெரிக்கன் கல்லூரி சமூகவியல் மாணவர்கள சந்தோஷ் குருஜித் நன்றி கூறினர்.

# மீனாட்சி சவுத்ரி மற்றும் ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்துள்ள ‘சங்கராந்திகி வஸ்துன்னம்‘ படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல்..



தெலுங்கு நடிகர் வெங்கடேஷ், தற்போது நடித்துள்ள படம் ‘சங்கராந்திகி வஸ்துன்னம்‘. அனில் ரவிபுடி இயக்கி இருக்கும் இப்படத்தில் மீனாட்சி சவுத்ரி, ஐஸ்வர்யா ராஜேஷ், உபேந்திரா லிமாயி, சாய்குமார், நரேஷ், வி.டி.வி கணேஷ் மற்றும் ஸ்ரீனிவாஸ் அவசராலா ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

தில் ராஜு மற்றும் ஷிரிஷ் தயாரித்துள்ள இப்படத்திற்கு பீம்ஸ் சிசிரோலியோ இசையமைத்துள்ளார். கடந்த ஜனவரி 14ம் தேதி பொங்கல் விருந்தாக திரைக்கு வந்த நிலையில் வசூல் ரீதியாக சாதனை படைத்துள்ளது. உலகம் முழுவதும் பாக்ஸ் ஆபீஸில் ரூ.250 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது. திரையரங்குகளில் வரவேற்பை பெற்று வரும்

இப்படத்தின் டிஜிட்டல் மற்றும் சாட்டிலைட் உரிமைகளை ஜீ குழுமம் பெற்றுள்ளது.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் அத்திக் கோம்பை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி பள்ளியில் ஆண்டுவிழா பள்ளி தலைமை ஆசிரியர் பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் மாவட்ட தலைமை மருத்துவ கல்லூரி இணை பேராசிரியர் திருலோகசந்திரன் கலந்து கொண்டனர். பள்ளி ஆசிரியர்கள் தனலட்சுமி, கலைவாணி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி கொண்டாடப்பட்டது.



திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை சார்பில் ஒட்டன்சத்திரம் கிறித்துவப் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் பணி வாய்ப்பு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161